THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

LIBRARY, STATE LEGISLATURE
19 MAY 1964
MADRAS

Saturday, 18th January 1964.

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS

STARRED QUESTIONS

ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள், ராமநாதபுரம்.

* **21 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கிழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ல் இராமநாதபுரம் மாவட்டத்தில் எத்தனை ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் உள்ளன ?

(இ) அவைகளில் (1) தனி நபரால் (2) அரசாங்கத்தாரால் நடத்தப்படுபவை எத்தனை ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : *(அ)* 12.

(இ) (1) 4. (2) 8.

திரு. கரு. சீமைச்சாமி : இப்பொழுது அநேக ஆசிரியர்கள் பயிற்சி பெற்று வேலை இல்லாமல் இருக்கிறார்கள். ஆகையால் இந்த பயிற்சி பள்ளிகளில் ஆசிரியர்களாக பயிற்சி பெறுவதற்கு மாணவர்களை எடுக்கும்பொழுது, வேலை வாய்ப்பு இருப்பதை அனுசரித்து, பயிற்சி பள்ளிகளில் மாணவர்களை அனுமதிப்பதற்கு அரசாங்கம் யோசிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்த வகையிலேதான் அரசாங்கம் கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் எவ்வளவு தேவை இருக்கிறது, எவ்வளவு ஆசிரியர்கள் பயிற்சி பெற்றவர்கள் இருக்கிறார்கள் என்று பார்த்துத் தான், புதிதாகப் பயிற்சிப் பள்ளிகள் திறப்பதற்கு அனுமதி கொடுக்கப்படுகிறது.

திரு. செ. மாதவன் : தனிப்பட்ட நபர்களால் நடத்தப்படும் பள்ளிகளில் ஊழல் இருப்பதாக மனுக்கள் வந்திருப்பதாக ஏற்கனவே அமைச்சர் அவர்கள் இங்கே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால் அரசாங்கப் பள்ளிகளுக்கு தேர்ந்தெடுக்கும் முறைப்படி, தனி நபர்களால் நடத்தப்படும் பள்ளிகளுக்கும் அரசாங்க அதிகாரிகள் கொண்ட குழுக்களே மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையை அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது பரிசிலனை செய்யப்பட்டது. அவ்வாறு செய்வதற்கு சட்ட பூர்வமாக சில ஆட்சேபணைகள் இருப்பதாகத் தெரிந்தது. புதிதாக இனி தனிப்பட்டவர்களால் நடத்தப்படும் பயிற்சிப் பள்ளிகளை அனுமதிப்பதில்லை என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

புலவர் கா. கோவிந்தன் : இந்த மன்றத்தில் கேட்ட கேள்விக்கு, அதாவது ராமனுதபுரம் மாவட்டத்தில் முற்றிலும் துறந்த முனிவர் நடத்தும் பள்ளியில் ஊழல்கள் இருப்பதாகவும் அதைப்பற்றி விசாரணை நடப்பதாகவும் அமைச்சர் அவர்கள் பதில் அளித்தார். அந்த விசாரணை முடிந்து, முடிவு அறிவிக்கப்பட்டு விட்டதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதெல்லாம் எனக்கு இப்பொழுது நினைவு இல்லை. முற்றிலும் துறந்த முனிவர் என்றெல்லாம் சொல்லாமல் விளக்கமாக தனியாகக் கேள்வி கேட்டால் பதில் சொல்லலாம்.

திரு. கே. பொன்னையன் : ஹையர் கிரேடு டிரையினிங்கை சர்க்கார் எடுத்துவிடப் போவதாகச் சொல்கிறார்கள். அது உண்மையானல், அதை இன்னும் கொஞ்ச காலத்திற்குத் தள்ளி வைப்பது பற்றி அரசாங்கம் யோசிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஹையர் கிரேடு டிரையினிங்கை எடுத்துவிடுவதாக அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. அதை இன்னும் தள்ளி வைப்பதாக இல்லை.

புலவர் கா. கோவிந்தன் : அமைச்சர் அவர்கள் முற்றும் துறந்த முனிவர் என்ற சொல்லைக் கையாண்டதால்தான் நானும் அதைப் பற்றி குறிப்பிட்டேன். குன்றக்குடி அடிகளார் நடத்தும் பள்ளி மகளிர் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியாக இருப்பதினல், அந்த ஊழல் ஒழுக்கம் பற்றியதாக இருக்குமா ? அல்லது பண விஷயமாக ஊழல் இருக்குமா ? அதைப் பற்றி அரசாங்கம் என்ன முடிவு எடுத்திருக்கிறார்கள் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : உண்மையிலேயே கனம் அங்கத்தினர் அவர்கள் விளக்கம் கூறியபிறகுதான் எனக்குப் புரிந்தது. இதைப்பற்றி தனியாகக் கேள்வி கேட்டால் விவரம் சொல்லுகிறேன்.

புலவர் கா. கோவிந்தன் : இந்தக் கேள்வி ஒரு முறை இந்த மன்றத்திலுள்ள உறுப்பினர்களால் கேட்கப்பட்டு, அதற்கு அமைச்சர் அவர்களும் பதில் அளித்திருக்கிறார்கள். மீண்டும் தனிக் கேள்வி வேண்டும் என்று சொன்னல், இது எவ்வளவு நாட்களுக்குப் பரிசீலனையில் இருக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கேள்வி கேட்கிற முறையை இரண்டு ஆண்டுகளாக கனம் அங்கத்தினர் அவர்கள் புரிந்து கொண்டிருப்பார்கள். குறிப்பாக பதில் வேண்டுமென்றால், குறிப்பாக கேள்வி கேட்கவேண்டும்.

பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள்

*** 22 கேள்வி—புலவர் கா. கோவிந்தன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் இதுவரை பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் எத்தனை நடைபெற்றன ?